**காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில்**
**21.03.2023 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தின்**
**தீர்மானம் நகல்கள்**

**பொருள் எண். 1**

**நகர்மன்ற தலைவரால் கொண்டு வரும் தீர்மானம்:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிக்கையில் வெளிமாநிலத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் தாக்கப்படுவதாக வதந்திகளைப் பரப்புபவர்கள், இந்திய நாட்டிற்கு எதிரானவர்கள், தமிழ்நாட்டின் ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் விளைவிப்பவர்கள். சமூக ஊடகங்களில் இப்படிக் கீழ்த்தரமான செய்திகளை பரப்புவது கண்டனத்திற்குரியது என்றும், மேலும், வர்த்தகத்திற்காக - தொழிலுக்காக - மருத்துவத்துக்காக - கல்விக்காக - வேலைக்காக என பல்வேறு மாநில மக்கள் தமிழ்நாட்டிற்கு வருவது காலங்காலமாக தொடர்ந்து வருகிறது அவர்கள் தாங்களும் உயர்ந்து, தமிழ்நாட்டையும் உயர்த்தி இருக்கிறார்கள். மேலும், சமீப காலமாக வேலை வாய்ப்பை தேடி அனைத்து மாநிலத் தொழிலாளர்களும், தமிழ்நாட்டிற்கு வருவது அதிகரித்து வருகிறது என்றும், சேவைத் துறைகள், கட்டுமானம், சிறு மற்றும் பெருந்தொழில் நிறுவனங்கள் என பல்வேறு துறைகளில், வேலைவாய்ப்புகள் வழங்கும் வகையில் தமிழ்நாடு திகழ்வதும் அனைத்து மாநில தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகளை தமிழ்நாடு செய்து தருவதோடு தொழிலாளர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு உரிய சலுகைகளையும், பாதுகாப்பினையும் உறுதி செய்து வருகிறது என்று தெரிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கையின்படி, காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் வர்த்தகம் மற்றும் தொழிலுக்காக வந்துள்ள அனைத்து மாநில தொழிலாளர்களின் அடிப்படை வசதிகளை செய்வதற்கும் தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்புகள் வழங்குவதற்கும் இந்நகர் பகுதியில் வர்த்தகம் மற்றும் தொழிலுக்காக வந்துள்ள வெளி மாநில தொழிலாளர் அனைவருக்கும், காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் எந்த பாதிப்பும் ஏற்படாதவாறும், காயல்பட்டினம் நகராட்சி பகுதிகளில் பணிக்கு அமர்த்தியுள்ள நிறுவனங்கள் / ஒப்பந்ததாரர்கள் மற்றும் மதிப்பிற்குரிய சகோதர சகோதிரிகள் அனைவரும் தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்து புலம்பெயர் தொழிலாளர்கள் தங்களது பெயர்களை பதிவு செய்வதற்கு உருவாக்கப்பட்ட வளைதளத்தில் பதிவு செய்யுமாறு இந்நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக் கொண்டு தீர்மானித்தல்.

**தீர்மானம் எண்.305**

காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து புலம்பெயர் தொழிலாளர்களும் தங்களது பெயர்களை தமிழக அரசு உருவாக்கி உள்ள வலைதளத்தில் பதிவு செய்யுமாறு இந்நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக்கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண். 2**

**நகர்மன்ற தலைவரால் கொண்டு வரும் தீர்மானம்:**

காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் பொதுமக்கள் பொழுதுபோக்கிற்காக கடற்கரைக்கு அதிகமானோர் சென்று வருகின்றார்கள். கடற்கரை பகுதியில் தெற்கு பக்கமும், வடக்கு பக்கமும் இருள் சூழ்ந்து காணப்படுவதால் சமூக விரோதிகள் மற்றும்

விஷ ஜந்துக்களால் ஏற்படும் ஆபத்தை தடுக்கும் வகையில் கடற்கரையில் இருள் சூழ்ந்துள்ள வடக்கு மற்றும் தென் பகுதிகளில் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்கும் பணி மேற்கொள்ள இந்நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக் கொண்டு தீர்மானித்தல்.

**<u>தீர்மானம் எண்.306</u>**

பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு நமக்கு நாமே திட்டத்தின் மூலம் உயர்மின்கோபுர விளக்குகள் அமைக்கும் பணிகள் செய்ய தீர்மானிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்.3</u>**

**<u>நகர்மன்ற தலைவரால் கொண்டு வரும் தீர்மானம்:</u>**

காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் பொதுமக்கள் பொழுதுபோக்கிற்காக கடற்கரைக்கு அதிகமானோர் சென்று வருகின்றார்கள் கடற்கரையில் தெற்கு பக்கமும் வடக்கு பக்கமும் மணல் திட்டுக்கள் இருப்பதால் பொதுமக்கள் சென்று வருவதற்கு இடர்பாடாக உள்ளது. ஆகவே, கடற்கரை பகுதியில் தெற்கு மற்றும் வடக்கு பகுதியில் உள்ள மணல் திட்டுக்களை ஜேசிபி / டோசர் மூலம் அப்புறப்படுத்தும் பணிகள் மேற்கொள்வதற்கு இந்நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக் கொண்டு தீர்மானித்தல்.

**<u>தீர்மானம் எண்.307</u>**

பொது மக்கள் நலன் கருதி மணல் திட்டுகளை ஜேசிபி/டோசர் இயந்திரம் மூலம் அப்புறப்படுத்தும் பணிகள் உடனடியாக மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்.4</u>**

காயல்பட்டினம் நகராட்சியின் 1வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. R. மாரீஸ்வரி அவர்கள் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

**<u>சாலை வசதிகள்</u>**

1. ஐநூற்று நங்கை அம்மன் கோவில் தெருவில் 60 ஆண்டுகளாக சுமார் 60 குடும்பங்கள் வசித்து வரும் பகுதிக்கு கலைஞர் வீட்டு வசதி திட்டத்தில் 30.06.2008 அன்று பட்டா கொடுக்கப்பட்டது ஆனால் இது வரை சாலை வசதி கிடையாது ஆகையால் அந்த பகுதிக்கு விரைவில் சாலை வசதி அமைத்தல்.
2. மங்களவிநாயகர் கோவில் தெருவில் 40 ஆண்டுகளாக போடப்படாமல் இருக்கும் 300 மீட்டர் மணல் பாதையில் சாலை அமைத்தல்.
3. உச்சினி மாகாளி அம்மன் கோவில் கிழக்கு தெருவில் உள்ள 200 மீட்டர் மணல் பாதையில் சாலை அமைத்தல்.
4. உச்சினி மாகாளி அம்மன் கோவில் தெருவில் 12 ஆண்டுகளாக போடப்படாமல் பழுதடைந்த நிலையில் உள்ள 600 மீட்டர் பொது மயான சாலையினை அமைத்தல்.

**குடிநீர் வசதி**

1. மங்கள விநாயகர் கோவில் தெருவில் சுமார் 40 குடிநீர் இணைப்புகள் உள்ளன. அப்பகுதியில் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். ஆனால் அந்த பகுதிகளுக்கு குடிநீர் சரியாக வருவது கிடையாது. மேலும், அப்பகுதி மக்கள் புதிய குடிநீர் இணைப்பு எடுப்பதற்கு முயல்வது கிடையாது ஆகையால் அப்பகுதி குடிநீர் இணைப்பினை சரி செய்தல்
2. உச்சினி மாகாளி அம்மன் கோவில் நடு தெருவில் சுமார் 50 குடிநீர் இணைப்புகள் உள்ளன அப்பகுதியில் 80 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். ஆனால் அந்த பகுதிகளுக்கு குடிநீர் சரியாக வருவது கிடையாது ஆகையால் அந்த குடிநீர் இணைப்பினை சரி செய்தல்.
3. ஐநூற்று நங்கை அம்மன் கோவில் தெருவில் விரிவாக்கம் அடைந்த பகுதிகளுக்கு சுமார் 500 மீட்டர் புதிய குடிநீர் விநியோக குழாய் அமைத்தல்.

**பொது**

1. ஊர் பொது மயானத்தில் காத்திருப்போர் நிழற்குடை அமைத்தல்.
2. ஊர் பொது மயானத்தில் 8 அடி அகல கிணறு மற்றும் தோவானம் அமைத்தல்
3. வார்டு -1-ல் காயல்பட்டினம் எல்லை பகுதியில் வரவேற்ப்பு பதாகை அமைத்தல்.

**தீர்மானம் எண்.308**

- அரசிடமிருந்து அனுமதி / மானியம் பெற்று சாலை பணிகள் செய்வதற்கு தீர்மானிக்கப்படுகிறது.
- இந்நகராட்சி நிதி நிலைமைக்கு ஏற்றவாறு குடிநீர் பணிகள் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகிறது
- இந்நகராட்சி நிதி நிலைமைக்கு ஏற்றவாறு பொது கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது

**பொருள் எண்.5**

காயல்பட்டினம் நகராட்சியின் 6 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. A.A. அஜ்வாது அவர்கள் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

**சாலை வசதி**

1. 6-வது வார்டு குத்துக்கல் தெரு சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் குண்டும் குழியுமாக இருப்பதால், அதை தரமான தார்ச்சாலை அமைத்தல்.

**குடிநீர் வசதி**

1. வருகின்ற ரமலான் மாதம் முழுவதும் காயல்பட்டினத்தில் உள்ள அனைத்து பள்ளி வாசல்களுக்கும், டேங்கர் லாரி மூலம் குடி தண்ணீர் விநியோகம் செய்தல்.
2. வருகின்ற ரமலான் மாதம் முழுவதும் குடிநீர் குழாய்களில் தண்ணீர் விநியோகம் செய்யும் நேரத்தை காலை 10 மணியளவில் மாற்றுதல்.

**பொது சுகாதாரம்**

காயல்பட்டினம் நகராட்சி குடியிருப்பு பகுதிகளில் நாய்த் தொல்லை மிகவும் அதிகமாக இருப்பதினால், நாய்களை பிடித்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

**பொது**

காயல்பட்டினம் நகராட்சி முழுவதும் தெருக்கள் விவரங்கள் அடங்கிய பெயர் பலகைகள் நிறுவுதல்.

**தீர்மானம் எண்.309**

- அரசிடமிருந்து அனுமதி / மானியம் பெற்று சாலை பணிகள் செய்வதற்கு தீர்மானிக்கப்படுகிறது
- குடி தண்ணீர் விநியோகம் செய்ய அனுமதிக்கப்படுகிறது
- அரசு விதிமுறைகளுக்குட்பட்டு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதற்கும் வெறிநோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்படுகிறது.
- இந்நகராட்சி நிதி நிலைமைக்கு ஏற்றவாறு பொது கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது

**பொருள் எண்.6**

காயல்பட்டினம் நகராட்சியின் 7வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.M.H. ரோஸியா பானு அவர்கள் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும், பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

**சாலை வசதி**

1. 7-வது வார்டுக்கு உட்பட்ட சிவன் கோவில் தெரு, முத்து ஹாஜி நகர், அக்பர் ஷா 1வது தெரு முதல் 3வது தெரு வரையிலான குறுக்கு சாலைகள் வடக்கே குழந்தைகள் பாலர்வாடி வரை மண் சாலைகளாக உள்ளது அதை தரமான தார்சாலைகளாக அமைத்தல்.
2. 7-வது வார்டுக்கு உட்பட்ட சிவன்கோவில் தெரு, முத்து ஹாஜி நகர், எல்.கே மெட்ரிகுலேஷன் பள்ளியில் இருந்து வடக்கு நோக்கி உச்சினிமாகாளி அம்மன் கோவில் தெருவுக்கு செல்லும் சாலை மிகவும் பழுதடைந்து உள்ளது. மழை நேரங்களில் இந்த சாலை பயன்படுத்த முடியாத அளவுக்கு தண்ணீர் தேங்குவதால் உடனடியாக அதை தரமான தார் சாலைகளாக அமைத்தல்.
3. 7-வது வார்டுக்கு உட்பட்ட சிவன்கோவில் தெரு (பாக்கர் காலணி) சாலைகள் மிகவும் சேதமடைந்து உள்ளதால் உடனடியாக அதை தரமான தார்சாலைகளாக அமைத்தல்.

**தெருமின் விளக்கு வசதி**

1. 7-வது வார்டுக்கு உட்பட்ட சிவன் கோவில் தெரு, எல்.கே. மெட்ரிகுலேஷன் பள்ளி வடக்கு பகுதியில் தெருவிளக்குகளுக்கான மின் பாதை அமைக்கப்படவில்லை இதனால் சமூக விரோதிகள் விஷ ஜந்துக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ளதால்

அவசர அவசியம் கருதி அப்பகுதியில் தெருவிளக்குகளுக்கான மின் பாதை அமைத்து நல்ல வெளிச்சமான தெருவிளக்குகள் அமைத்தல்.

2. 7-வது வார்டுக்கு உட்பட்ட சிவன்கோவில் தெரு, முத்து ஹாஜி நகர், அக்பர்ஷா தெரு வடக்கே குழந்தைகள் பாலர்வாடி மற்றும் அங்கு புதிதாக குடியிருப்பு ஏற்பட்டுள்ள பகுதிகளில் இது வரை தெருவிளக்குகள் வசதி இல்லை, அவசிய அவசரம் கருதியும், சமூக விரோதிகள், விஷ ஜந்துக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ளதாலும் உடனடியாக தெரு மின் விளக்கு வசதி அமைத்தல்.
3. 7-வது வார்டுக்கு உட்பட்ட சிவன் கோவில் தெரு, VAO அலுவலகம், விநாயகர் கோவில் , பை பாஸ் ரோடு செல்லும் முச்சந்தி சாலையாக உள்ளதால் அந்த இடத்தில் உயர்கோபுர மின் விளக்கு அமைத்தல்.
4. 7-வது வார்டுக்கு உட்பட்ட சிவன்கோவில் தெரு, அக்பர்ஷா தெரு, மஸ்ஜித்துர் ரஹ்மான் பள்ளி வாசல், எல்.கே. மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி முச்சந்தி பகுதியில் தெருவிளக்குகள் இல்லாததால் இரவு நேரங்களில் போதிய வெளிச்சமில்லை. சிறுமின் கோபுர விளக்கு அமைத்தல்.
5. 7-வது வார்டுக்கு உட்பட்ட சிவன்கோவில் தெரு, VAO அலுவலகம் எதிரில் நகராட்சி பொதுக்கிணறு எதிரே தெருவிளக்குக்கான மின் பாதை அமைக்கப்படவில்லை அவசிய அவசரம் கருதியும், விஷஜந்துக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ளதாலும் அப்பகுதியில் தெருவிளக்குகளுக்கான மின் பாதை அமைத்து நல்ல வெளிச்சமான தெருவிளக்குகள் அமைத்தல்.

**<u>குடிநீர் வசதி</u>**

7-வது வார்டுக்கு உட்பட்ட குளம் சாஹிப் தம்பி தோட்டம் பகுதியில் உள்ள மக்களுக்கு குடிநீர் சரியாக வருவதில்லை. ஆகவே, அப்பகுதியில் புதியதாக பைப்லைன் அமைத்தல்.

**<u>பொது</u>**

7-வது வார்டுக்கு உட்பட்ட சிவன் கோவில் தெரு, நகராட்சி நுண் உரக்குடில் அருகே பாழடைந்து பழைய பிரேத பரிசோதனை கட்டிடம் அபாயகரமாக உள்ளதால் அதை இடித்து அப்புறப்படுத்தவும், அப்பகுதி சமூக விரோதிகளின் புகலிடமாக உள்ளதால் அப்பகுதியில் இருந்து சேதுராஜா தெரு வரை செல்லும் ரோட்டில் தெருவிளக்கு கம்பங்களில் பல மாதங்களாக தெரு விளக்குகள் பொறுத்தப்படாமல் இருப்பதால் அவற்றில் தெரு விளக்குகள் பொறுத்துவதற்கு சம்மந்தபட்ட ஒப்பந்தகாரருக்கு அறிவுறுத்தி தெருவிளக்குகள் அமைத்தல்.

**<u>தீர்மானம் எண்.310</u>**

- அரசிடமிருந்து அனுமதி / மானியம் பெற்று சாலை பணிகள் செய்வதற்கு தீர்மானிக்கப்படுகிறது
- இந்நகராட்சி பகுதிகளில் புதிய LED தெருவிளக்குகள் அமைப்பதற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ள நிலையில் பணிகளை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.
- இந்நகராட்சி நிதி நிலைமைக்கு ஏற்றவாறு குடிநீர் பணிகள் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்.7**

காயல்பட்டினம் நகராட்சியின் 9 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. N. பூங்கொடி அவர்கள் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கு பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது

**சாலை வசதி**

1. 9-வது வார்டுக்கு உட்பட்ட அனைத்து மணல் சாலைகளையும் தார் சாலையாக மாற்றி அமைத்தல்.
2. டாக்டர் ராணி டப்ஸ் தெருவில் சாலை பணிகளை முடித்து தரும்படியும், மேல லெட்சுமிபுரம் சாலை போடப்பட்டு 20 வருடம் முடிந்த நிலையில் சாலைகள் குண்டும் குழியுமாக இருப்பதால் நடப்பதற்கே சிரமமாக இருப்பதாலும் அப்பகுதியில் புதிய சாலை அமைத்தல்.

**தெருமின் விளக்கு**

1. 9-வது வார்டுக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் தெருமின்விளக்கு கம்பிகள் அமைத்து புதியதாக தெரு விளக்கு பொருத்துதல்.
2. அழகாபுரி முதல் ஆர்ச் வரைக்கு அடிக்கடி விபத்து ஏற்படுவதால் அதை தவிர்க்கும் விதமாக வெளிச்சம் அதிகம் தரும் விளக்குகள் அமைத்தல்

**பொது**

1. கீழ லெட்சுமிபுரம் துணை சுகாதார நிலையம் உடையும் நிலையில் உள்ளதால் அதனை சீர் செய்யுமாறு கோருதல்.
2. காயல்பட்டினம் நகராட்சி மூலம் சுய தொழில் செய்யுமாறு (மெழுகுதிரி, டெய்லர், எம்பிராய்டிங்) போன்ற மகளிர்களுக்கான கை தொழில் செய்வதற்கு வசதி செய்தல்
3. பப்பரப்பள்ளி மையானக் கரை செல்லும் வழியில் இருபுறமும் முள் செடிகள் இருப்பதால் அப்பகுதியில் ஆட்டுக் கழிவு, கோழிக் கழிவு அங்கே கொட்டப்பட்டு வருகிறது. இதனால் அங்கு துர்நாற்றம் ஏற்பட்டு நாய்கள் தொல்லைகள் அதிகமாக இருக்கிறது. இவற்றை கண்காணிக்கும் பொருட்டு கண்காணிப்பு கேமரா பொருத்துதல்.
4. L.R. நகர் நான்கு பாதை ரோடு சேரும் பாதையில் வேகத்தடை அமைத்தல்.
5. 9-வது வார்டுக்கு உட்பட்ட அனைத்து தெருக்களிலும் பெயர் பலகை அமைத்தல்.
6. 9-வது வார்டுக்கு உட்பட்ட லெட்சுமிபுரத்தில் அங்கன்வாடி இடிந்து விழும் நிலையில் உள்ளதால் அவற்றை சீர் செய்யும் பணி மேற்கொள்ளுதல்.
7. காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் பருவ மழை இந்த வருடம் குறைவாக உள்ளதால் தண்ணீர் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு இருப்பதால் ஆழ்துளை குழாய் போட்டு சட்டத்திற்கு விரோதமாக தண்ணீர் எடுப்போர் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

**<u>தீர்மானம் எண்.311</u>**

- அரசிடமிருந்து அனுமதி / மானியம் பெற்று சாலை பணிகள் செய்வதற்கு தீர்மானிக்கப்படுகிறது
- இந்நகராட்சி பகுதிகளில் புதிய LED தெருவிளக்குகள் அமைப்பதற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ள நிலையில் பணிகளை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.
- பொது கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது

**<u>பொருள் எண். 8</u>**

நமக்கு நாமே திட்டம் 2022-2023 நிதியின் கீழ் காயல்பட்டினம் நகராட்சிக்கு பொதுமக்கள் பங்களிப்புடன் அரசு மானியத்தில் கீழ்காணும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.8880/2022/P1 நாள். 13.02.2023-ந் தேதிய கடிதத்தின் வாயிலாக பெறப்பட்டுள்ள அனுமதியின்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களுக்கு நிர்வாக அனுமதி கோரி கருத்துரு அனுப்பப்பட்டது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | அரசு மானியம் 67% | பொதுமக்கள் பங்களிப்பு 33% |
|---|---|---|---|---|
| 1 | காயல்பட்டினம் பைபாஸ் சாலையில் சூரிய விளக்குகள் (Solar Lights) அமைக்கும் பணிகள் | 10.00 | 6.70 | 3.30 |

அரசாணை (U) எண்.158, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 02.11.2022 -ல் தெரிவித்துள்ளதற்கிணங்க, மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ந.க.எண்.567/2023/ஆ1 நாள்.14.02.2023-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள கடிதம் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் .276/2023/இ1)

**<u>தீர்மானம் எண்.312</u>**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.
- நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 9**

நமக்கு நாமே திட்டம் 2022-2023 நிதியின் கீழ் காயல்பட்டினம் நகராட்சிக்கு பொதுமக்கள் பங்களிப்புடன் அரசு மானியத்தில் கீழ்காணும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.8880-2/2022/P1 நாள்.06.03.2023-ந் தேதிய கடிதத்தின் வாயிலாக பெறப்பட்டுள்ள அனுமதியின்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களுக்கு நிர்வாக அனுமதி கோரி கருத்துரு அனுப்பப்பட்டது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | அரசு மானியம் 67% | பொதுமக்கள் பங்களிப்பு 33% |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலைய வளாகத்தில் மேல்நிலை நீர் தேக்க தொட்டி பணியாளர் ஓய்வு அறை அமைத்தல் பணி | 7.50 | 5.025 | 2.475 |
| 2. | நகராட்சிக்குட்பட்ட அலுவலக வளாகத்தில் பொதுமக்களுக்கு நிழற்குடை அமைத்தல் பணி | 7.50 | 5.025 | 2.475 |
| 3 | நகராட்சிக்குட்பட்ட சிவன் கோவில் தெருவில் கட்டப்பட்டுள்ள நுண் உரக்குடிலை சுற்றி சுற்று சுவர் கட்டுதல் பணி | 22.00 | 14.74 | 7.26 |
| 4 | நகராட்சிக்குட்பட்ட சிவன் கோவில் தெருவில் கட்டப்பட்டுள்ள நுண் உரக்குடில் வளாகத்தில் நிழற்குடை அமைத்தல் பணி. | 7.50 | 5.025 | 2.475 |
| மொத்தம் | | 44.50 | 29.815 | 14.685 |

அரசாணை (U) எண்.158, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 02.11.2022 -ல் தெரிவித்துள்ளதற்கிணங்க, மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ந.க.எண்.567/2023/ஆ1 நாள்.16.03.2023-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள கடிதம் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் .276/2023/இ1)

**<u>தீர்மானம் எண்.313</u>**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.
- நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.10</u>**

காயல்பட்டினம் நகராட்சி அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தி வரும் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் பழுது நீக்க பணிகள் செய்வதற்கு ஓராண்டு காலம் பராமரிப்பு, உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்றிடவும், குறைந்த விலைப்புள்ளி வழங்கும் நிறுவனத்தின் விலை விகிதத்தை அனுமதித்து அந்நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கிடவும், அதன் பொருட்டு மேற்கொள்ளப்படும் உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1013/2016/சி2)

**<u>தீர்மானம் எண்.314</u>**

அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் எண்.11</u>**

காயல்பட்டினம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான எழுது பொருட்கள், ஸ்டேஷனரி மற்றும் கணினி இரசீதுகள் மற்றும் படிவங்கள் 2023 - 2024 ஆம் ஆண்டுக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு சொசைட்டி மூலம் வாங்குவதற்குரிய உத்தேச செலவு தொகை ரூ.7.00 இலட்சம் ஆகும். மேற்காணும் செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து உத்தேச செலவினம் ரூ. 7.00 இலட்சம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.997/2015/அ1)

**<u>தீர்மானம் எண்.315</u>**

அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் எண். 12</u>**

காயல்பட்டணம் நகராட்சியில் கட்டிட அனுமதி மற்றும் உரிமையாணை கட்டணங்கள் கடந்த **2020**ம் ஆண்டு தூத்துக்குடி மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டு **01.10.2019** முதல் வசூலிக்கப்பட்டு வருகின்றது. மேலும் தற்போது விடுபட்ட உள்ளாட்சிதுறை அறிவிக்கை படியான கட்டணங்களை வருகின்ற நிதியாண்டில் வசூல் செய்திட கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

<u>காயல்பட்டணம் நகராட்சி திருத்தப்பட்ட புதிய கட்டண விபரங்கள்</u>

| வ. எண். | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் | விபரம் | தற்போதைய கட்டணம் (ரூ) | 01.04.2023 முதல் அமுல்படுத்தப்பட உள்ள புதிய கட்டணம் | அளவு விபரங்கள் | காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 183(2) | மாடிப்படிக்கட்டு 1க்கு, தனியாகவோ (அ) கட்டிடத்தோடு இணைக்கப்பட்ட தாகவோ, (குடியிருப்பு / குடியிருப்பு அல்லாத கட்டிடம்) | படிகள் 1.08 ச.மீ (அ) 12 சதுர அடிக்கு மேற்பட்டால் (1 ச.மீ அதன் பாகம்) | ரூ.100/– | ஒவ்வொரு எண்ணத் திற்கும் | 5 வருடம் |
| 2 | 217(1) | மேல்நிலை நீர் தேக்க தொட்டி | – | ரூ.1500/– | ஒவ்வொரு எண்ணத் திற்கும் | 5 வருடம் |
| 3 | 197, 201 மற்றும் 215 | தெரு ஓரங்களில் கட்டிட சாமான்கள் சேமித்து வைத்திட, | 50 சதவீதம் வசூல் செய்யப்படும் அது திருப்பி வழங்கப்பட மாட்டாது. | கட்டிட உரிமைக் கட்டணத்தில் 75 சதவீதம். | ஒரு முறை மட்டும் | 5 வருடம் |
| 4 | 197, 201 மற்றும் 215 | அபிவிருத்தி கட்டணம் | | | 10 ச.மீ மற்றும் அதன் பாகம் | 5 வருடம் |
| | | குடியிருப்பு கட்டிடம் மனை பகுதிக்கு | – | ரூ.40/– | | |
| | | குடியிருப்பு கட்டிடம் பரப்பளவிற்கு | – | ரூ.60/– | | |
| | | குடியிருப்பு அல்லாத கட்டிடம் மனை பகுதிக்கு | – | ரூ.63/– | | |
| | | குடியிருப்பு அல்லாத கட்டிடம் பரப்பளவிற்கு | – | ரூ.125/– | | |

மேற்கண்ட பட்டியல்படியான கட்டணங்களை வருகின்ற **01.04.2023** முதல் வசூல் செய்திடும் பொருட்டும், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திடவும் அதற்கான செலவினங்களை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1206/2019/எப்.1)

**<u>தீர்மானம் எண்.316</u>**

அரசிதழில் பிரசுரம் செய்து நடவடிக்கை எடுத்திட அனுமதிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்.13</u>**

காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தூய்மை பணிகள் மற்றும் நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள, தற்சமயம் குறைந்த அளவில் தளவாடசாமான்கள் மற்றும் கிருமிநாசினிகள் இருப்பில் உள்ளதால், அத்தகைய தேவையான பொருட்கள் அனைத்தையும் வரும் நிதியாண்டிற்கு வாங்கி வழங்கிட, இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் அறிக்கை செய்துள்ளார். அதன்படி பொருட்கள் வாங்கிடவும் அதற்கான செலவினங்களை பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 410/2023/எச்.1)

**<u>தீர்மானம் எண்.317</u>**

அனுமதிக்கப்படுகிறது

**<u>பொருள் எண்.14</u>**

காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவின் மூலம் மக்கும் குப்பையில் இருந்து தயார் செய்யப்படும் இயற்கை உரங்களை, நகராட்சிக்கு அருகில் உள்ள, கிள்ளிகுளம் அரசு வேளாண்மை கல்லூரியில் பகுப்பாய்வு செய்திடவும், மேலும் உதவி இயக்குநர் (உர கட்டுப்பாடு), மாவட்ட வேளான் இணை இயக்குநர், தூத்துக்குடி அலுவலகத்தில் விண்ணப்பம் செய்து உரிமம் பெற்று அதன் பிறகு "செழிப்பு'' என்ற பெயரில், விற்பனை செய்திடவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண். ந.க.எண்.3088/2022/தூ.இ.தி1 நாள் 23.02.2023.ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி நடைமுறைகளை உடனடியாக செய்திடவும் அதற்கான செலவினங்களை பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u> அவசர அவசியம் கருதியும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தியதின்படியும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.021/2022/எச்.1)

**<u>தீர்மானம் எண்.318</u>**

அனுமதிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்.15</u>**

காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவின் பயன்பாட்டில் இருந்த வந்த, வாகனங்கள். டிஎன் 69 எஸ் 0761, டிஎன் 69 எஸ் 0767 ஆகிய வாகனங்கள் இயக்க முடியாத நிலையில் உள்ளதால், அந்த வாகனங்களை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் 2652/2018/தி2 நாள் 11.03.2021ன் படி, கழிவு நீக்கம் செய்திடும் நடவடிக்கையில், அவைகளுக்கான பசுமை வரி மற்றும் சேவை வரிகளாக தொகை முறையே, ரூ.2220/–, ரூ.2220/– ஆக மொத்தம் ரூ.4440/– னை இந்நகராட்சி சுகாதார ஆய்வாளரால் இணையதளம் மூலம் வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்செந்தூர் அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

ஏனவே, தற்போது அதனை தனியரின் பெயருக்கு வழங்கிடவும், மேற்படி செலவு தொகையினை இந்நகராட்சியின் பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 821/2022/எச்.1)

**<u>தீர்மானம் எண்.319</u>**

அனுமதிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்.16</u>**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணி (SWM) தூய்மை பணியாளர்கள் மற்றும் வாகனங்களை பயன்படுத்தி மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து வாங்கும் வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) பணிகள் செய்வதற்கான மதிப்பீடு ரூ.264.95 இலட்சத்திற்கு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் செயல்முறை ந.க.எண்.32945/2022/EA2-SWM-11 நாள். 10.01.2023-ன்படி, அனுமதி மற்றும் சென்னை நகராட்சி இயக்குநரக, முதன்மை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.001/2022/DO1 நாள்.02.02.2023-ன்படி, மேற்காணும் பணிக்கு 14.03.2023-ந் தேதி இரண்டு உறையிலான மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை வெளியீட்டு ஆணை எண். 737 நாள்.03.02.2023 -ந் தேதிய பரிந்துரையின்படி மாநில அளவில் 04.02.2023 அன்று ஒரு தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் (All Editions in the State ) விளம்பரம் செய்த வகைக்கு சென்னை, அகார்ட் அட்வர்டைசிங் நிறுவனத்தின் விளம்பரக் கட்டணம் (வரிகள் உட்பட) ரூ.51,206/-க்குரிய பட்டியல் எண்.AAA/0793/22-23 நாள். 07.02.2023-ன்படியானது இந்நகராட்சிக்கு 28.02.2023-ந் தேதி வரப்பெற்றுள்ளது

மேற்காணும் விவரப்படியான விளம்பரக் கட்டணம் ரூ. 51.206/- மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 1329/2022/எச்1)**

**அலுவலகக் குறிப்பு**

சென்னை, அகார்ட் அட்வர்டைசிங் ஏஜென்ஸிக்கு விளம்பர கட்டணம் ரூ.51,206/-ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.320</u>**

அனுமதிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்.17</u>**

காயல்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான ஆடு, மாடு அறுப்பு கூடம் வசூல் செய்யும் உரிமம் (Slaughter House) 3 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் உரிமம் வழங்குவதற்கு கடந்த 21.12.2021 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலம் நடத்தப்பட்டது. ஏலம் நடத்தப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண்.2193 நாள்.24.12.2021-ன்படி அனுமதி பெற்று திரு. J. ஜோதி லிங்கம் என்பவருக்கு 01.01.2022 முதல் 31.12.2022 வரை முதலாம் ஆண்டு குத்தகை உரிமம் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண்.243 நாள்.29.12.2023-ன்படி, மேற்கண்ட குத்தகை வசூல் செய்யும் உரிமத்திற்கு 01.01.2023 முதல் 31.12.2023 வரை இரண்டாம் ஆண்டுக்கு புதுப்பித்தல் கட்டணம் செலுத்த தெரிவிக்கப்பட்டது. புதுப்பித்தல் கட்டணம் செலுத்தப்படாத நிலையில் இந்நகராட்சியில் ஆடு, மாடு அறுப்பு கூடம் கட்டணம் 01.01.2023 முதல் இந்நகராட்சி மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து ஏலதாரர் திரு. J. ஜோதி லிங்கம் என்பவரது விண்ணப்பத்தில் (1)ஆடு,மாடு அறுப்புகூடத்தின் அருகில் உள்ள மக்கும் குப்பை மக்காத குப்பை பிரிக்கும் இயந்திர அமைப்பை அகற்றுதல்,(2)ஜேசிபி இயந்திரங்களைக்கொண்டு குப்பைகளை கிளறாமல் இருத்தல்,(3)குடிநீர் இணைப்பு, (4)சுற்றுச்சுவர் சீர்செய்தல், (5)அறுப்பு கூடத்தின் மாடுகள் கட்டும் இடத்தை காலி செய்து மீண்டும் என்னிடம் ஒப்படைத்தல்,(6)அறுப்பு கூடத்தின் ஷட்டர் மற்றும் முன் கேட்டினை பராமரித்து குப்பை பிரிப்பவர்களிடம் உள்ள சாவியை என்னிடத்தில் ஒப்படைக்குமாறு தெரிவித்து மேற்கண்ட கோரிக்கையை நிவர்த்தி செய்தால் குத்தகை தொகையினை செலுத்த தயாராக உள்ளேன் என தெரிவித்ததோடு, மேற்கண்ட குறைகளை சரிசெய்யாத பட்சத்தில் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு நீதிமன்றம் மூலம் எனது குறைபாடுகளை எடுத்து சென்று இழப்பீடு தொகை வேண்டி வழக்கு தொடரப்படும் என்று தெரிவித்து மனு செய்துள்ளார்.

எனவே, மேற்கண்ட ஏலத்தை தொடர்ந்து நடத்தாத திரு. J. ஜோதி லிங்கம் என்பவரின் விண்ணப்ப மனுவின் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.321</u>**

- இந்நகராட்சி ஆடு, மாடு அறுக்கும் கூடம் அருகில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பயோ மைனிங் பணிகள் நடைபெறுவதால் திரு.J.ஜோதிலிங்கம் என்பவரின் மனுவில் வரிசை எண். 1 மற்றும் 2-ல் குறிப்பிட்டுள்ள கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.
- வரிசை எண். 3 மற்றும் 4-ல் கண்டுள்ள கோரிக்கை நிவர்த்தி செய்யும் பொருட்டு அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன ஆடு, மாடு அறுக்கும் கூடம் புதிதாக கட்டுவதற்கு தீர்மானிக்கப்படுகிறது.
- வரிசை எண். 5 மற்றும் 6-ல் கண்டுள்ள கோரிக்கை நிரகரிக்கப்படுகிறது.

- மனுதாரர் திரு.J.ஜோதிலிங்கம் என்பவர் இரண்டாம் ஆண்டு குத்தகை வசூல் செய்யும் உரிமத்திற்கு 01.01.2023 முதல் 31.12.2023 வரை இரண்டாம் ஆண்டுக்குரிய புதுபித்தல் கட்டணம் செலுத்தாததால், நிர்வாக நலனை கருத்தில் கொண்டு 01.01.2023 முதல் நகராட்சி மூலம் வசூல் செய்வதற்கு அங்கீகரிக்கப்படுகிறது.
- ஏலவிதிகளின்படி மேல்நடவடிக்கை தொடர அனுமதிக்கப்படுகிறது.

**பொருள். எண்.18**

இந்நகர்மன்ற தீர்மான எண். 228, நாள். 29.11.2022-ன் படி கீழ்காணும் குத்தகை இனங்களுக்கு மூன்று ஆண்டு குத்தகை அடிப்படையில் உரிமம் வழங்குவதற்கு 2023-2024 முதல் 2025-2026ம் ஆண்டு வரை ( 01.04.2023 முதல் 31.03.2026 வரை) உள்ள மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் வழங்குவதற்கு 08.03.2023 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

1. புதிய பேருந்து நிலையம், பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்
2. வண்ணார்குடி கடைத் தெருவில் உள்ள தினசரி சந்தையில் உள்ள வியாபாரிகளிடம் தினசரி வசூல் செய்யும் உரிமம்.
3. கடற்கரை பூங்காவில் உள்ள கழிப்பறை கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
4. ஓடக்கரை பகுதியில் உள்ள உப்பு ஓடையில் மீன் பிடிக்கும் உரிமம்.
5. புதிய பேருந்து நிலையம் கிணற்றில் தண்ணிர் எடுக்கும் உரிமம்

மேற்கண்ட குத்தகை இனங்களில் வரிசை எண்.5-ல் கண்டுள்ள குத்தகை இனங்களுக்கு மட்டும் ஏல பொறுப்பு தொகைகள் கீழ்கண்ட நபர்களால் செலுத்தப்பட்டது. ஆனால் 08.03.2023 அன்று காலை 11.00 மணி வரை நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. அதனைதொடர்ந்து காலை11.30 மணிக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் கீழ்காணும் நபர்கள் கலந்து கொண்டனர்.

| | |
|---|---|
| 1. திரு. புஹாரி ஷரீஃப்,<br>த/பெ. அப்துல் ரசீத்,<br>141ஏ, சேது ராஜா தெரு,<br>காயல்பட்டினம் | ஏலம் கோர எவரும் முன்வரவில்லை |
| 2. திரு. சதக்கத்துல்லா,<br>த/பெ. அபுல் ஹசன்,<br>179, அலியார் தெரு,<br>காயல்பட்டினம் | |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலத்திற்கு கடைசியாக 22.11.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகையின் அடிப்படையில் அரசாங்க மதிப்பு ரூ8,00,000/- ஆக நிர்ணயம் செய்யப்பட்டது. இதில் ஏலதாரர்கள் ஏலம்

கோராததால் மேற்கண்ட ஏலத்திற்கு தற்போது நகராட்சி மூலம் தினசரி வசூல் செய்யும் கட்டணத்தின் அடிப்படையில் அரசாங்க மதிப்பு ரூ. 7,50,000/-, ரூ,7,25,000/- மற்றும் ரூ.7,00,000/- ஆக குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்பின்பும் அரசாங்க மதிப்பிற்கு ஏலம் கோர எவரும் முன்வரவில்லை

ஆகவே, மேற்காணும் ஐந்து ஏல இனங்களுக்கும், அரசாங்கம் மதிப்பினை குறைத்து நிர்ணயம் செய்து, மறு ஏலம் கோருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட ஐந்து ஏல இனங்களில் வரிசை எண்.4- ஐ தவிர தற்போது நகராட்சி மூலம் வசூலிக்கப்படும் தினசரி கட்டண வசூல் விகிதத்தின் அடிப்படையில் அரசாங்கம் மதிப்பினை குறைத்து நிர்ணயம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட 5 ஏல இனங்களில் வரிசை எண்.4-ல் கண்டுள்ள ஏல இனத்தை ஏல நடவடிக்கையிலிருந்து நீக்கம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. வரிசை எண். 1, 2, 3 மற்றும் 5-ல் கண்டுள்ள ஏல இனங்களுக்கு மறு ஏலம் கோருவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்: 706/2015/அ2)**

**<u>தீர்மானம் எண்.322</u>**

- ஐந்து ஏல இனங்களில் வரிசை எண். 1,2,3 மற்றும் 5 ஆகிய நான்கு ஏல இனங்களும் பலமுறை ஏலம் கோரியும் ஏலம் எடுப்பதற்கு எவரும் முன் வரவில்லை. ஆகையால், அரசாங்கம் மதிப்பினை குறைத்து நிர்ணயம் செய்து ஏல நடவடிக்கை தொடர அனுமதிக்கப்படுகிறது.
- ஏல இனங்களில் வரிசை எண்.4-ல் கண்டுள்ள ஏல இனத்தை மட்டும் ஏல நடவடிக்கையில் இருந்து நீக்கம் செய்வதற்கும் அனுமதிக்கப்படுகிறது.
- நான்கு ஏல இனங்களுக்கு மறு ஏலம் கோருவதற்கு அனுமதிக்கப்படுகிறது**.**

**பொருள் எண்.19**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின், சுற்றறிக்கை ந.க.எண்.40032/ஆர்-1/2012-2 நாள்:12.09.2022 -ன்படி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் தொடர்ந்து நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் வரி மற்றும் வரியற்ற இனங்களை நிலுவையின்றி 100% வசூல் செய்ய அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் 20.02.2023 அன்று சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக இணை இயக்குநர் அவர்களால் இந்நகராட்சி 2022 - 2023 ஆம் ஆண்டுக்குரிய சொத்துவரி, காலியிடவரி, தொழில் வரி, வரியற்ற இனங்கள் மற்றும் குடிநீர் கட்டணங்கள் நிலுவை & நடப்பின்படி, ஆய்வு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் காணொலி வாயிலாக நடத்தப்படும் ஆய்வுக் கூட்டத்தில் காயல்பட்டினம் நகராட்சியில் உள்ள சொத்துவரி வரிவிதிப்பு எண்கள் 16521 ல் சொத்துவரி அதிகமாக நிலுவை உள்ளதால் நிலுவை சொத்துவரிகளை உடனடியாக வசூல் செய்யவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி இந்நகராட்சி நிலுவை சொத்துவரியினை 100 சதவீதம் வசூல் செய்வதற்கு உரிய

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் இந்நகராட்சியில் பெரும்பாலான சொத்துவரி வரிவிதிப்பானது ஒரே வீட்டிற்கு இரண்டு கேட்புகள் (Double Entry) 2010 - 2011 முதல் இது நாள் வரை நெடுங்காலமாக நிலுவையில் இருந்து வருவதாகவும், அதனை வசூல் செய்ய இயலாத நிலையில் உள்ளதால் 65 எண்ணம் சொத்துவரி விதிப்புகளை நீக்கம் செய்வதற்கு இந்நகராட்சி வருவாய் உதவியாளர்களால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இந்நகராட்சி வருவாய் ஆய்வாளர் அவர்களால் மேல் ஆய்வு செய்யப்பட்டு, இந்நகராட்சி சொத்துவரி இரட்டை கேட்புகள் (Double entry), இடிக்கப்பட்ட கட்டிடம் (Building Demolish),பட்டியல்படி,தொகை ரூ. 2,03,547/- நீக்கம் செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| வார்டு எண் | மொத்த சொத்துவரி விதிப்புகள் | தொகை |
|---|---|---|
| 01 | 01 | 5771 |
| 02 | 01 | 5681 |
| 03 | 01 | 4669 |
| 04 | 05 | 19462 |
| 05 | 06 | 14292 |
| 06 | 03 | 17752 |
| 07 | 13 | 33618 |
| 08 | 04 | 16046 |
| 10 | 05 | 15303 |
| 11 | 01 | 5648 |
| 13 | 12 | 23462 |
| 14 | 03 | 17271 |
| 15 | 01 | 2180 |
| 16 | 07 | 20202 |
| 18 | 02 | 2190 |
| மொத்தம் | 65 | **203547** |

பட்டியல்படி, சொத்துவரி விதிப்புகளில் வசூலிக்க இயலாத நிலுவை சொத்துவரி கேட்பு தொகை ரூ. 2,03,547/- ஐ சொத்துவரி கேட்பு கணினி மென்பொருளில் இருந்து நீக்கம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

இந்நகராட்சியில் வசூலிக்க இயலாத நிலுவை சொத்துவரி கேட்பு தொகை ரூ. 2,03,547/-ஐ கணினி மென்பொருளில் இருந்து நீக்கம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 417/2022/அ2)**

**<u>தீர்மானம் எண்.323</u>**

காயல்பட்டினம் நகராட்சியில் 65 எண்ணம் சொத்துவரி நிலுவை கேட்பு ரூ.2,03,547/-ஐ பொறுத்தவரை, ஏற்கனவே இருந்த வீடுகள் இடிக்கப்பட்டு, அவ்வாறு இடிக்கப்பட்ட வீடுகளுக்கு பழைய வரிவிதிப்பினை செலுத்தாமல், வீட்டின்

உரிமையாளர்கள் புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு, புதியவரிவிதிப்பு செய்துள்ளார்கள். ஏற்கனவே இருந்துள்ள இடிக்கப்பட்ட வீடுகளுக்குரிய சொத்துவரி வசூல் செய்ய இயலாத நிலையில் அவை இரட்டை கேட்புகளாக (Double Entry) உள்ளது. அவற்றை நகராட்சி வருவாய் உதவியாளர்கள், வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களால் தெளிவாக கள ஆய்வு செய்தும், மேலாளரால் மேலாய்வு செய்யப்பட்டும், வசூல் செய்ய முடியாத இனங்கள் தான் என்று தெளிவாக தங்களது குறிப்பின் மூலம் தெரிவித்துள்ளனர். மேலும்,நகர்மன்ற உறுப்பினர்களும் தங்களது பகுதிகளில் உள்ள இரட்டை கேட்புகள் அனைத்தும், வசூல் செய்ய முடியாதவைகள் தான் என உறுதியுடன் ஏக மனதாக தெரிவித்துள்ளனர். எனவே நகர்மன்ற உறுப்பினர்களின் கருத்துகளின் அடிப்படையில் 65 எண்ணம் கேட்புக்கான சொத்துவரி ரூ. 2,03,547/-ஐ கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தால் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது

**பொருள் எண்.20**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின், சுற்றறிக்கை ந.க.எண்.40032/ஆர்-1/2012-2 நாள்:12.09.2022 -ன்படி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் தொடர்ந்து நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் வரி மற்றும் வரியற்ற இனங்களை நிலுவையின்றி 100% வசூல் செய்ய அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் 20.02.2023 அன்று சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக இணை இயக்குநர் அவர்களால் இந்நகராட்சி 2022 - 2023 ஆம் ஆண்டுக்குரிய சொத்துவரி, காலியிடவரி, தொழில் வரி, வரியற்ற இனங்கள் மற்றும் குடிநீர் கட்டணங்கள் நிலுவை & நடப்பின்படி, ஆய்வு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் காணொலி வாயிலாக நடத்தப்படும் ஆய்வுக் கூட்டத்தில் காயல்பட்டினம் நகராட்சியில் உள்ள 1446 காலிமனை வரி கேட்புகளில் அதிகமாக நிலுவை உள்ளதால் அவற்றை வசூல் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் இந்நகராட்சியில் காலிமனைவரி விதிப்புகள் 2010 - 11 முதல் இது நாள் வரை நிலுவையில் இருந்து வருவதாகவும், இதில் ரூ. 7,91,180/-க்குரிய 285 எண்ணம் காலிமனை வரி கேட்புகளுக்கு, சொத்துவரி விதிப்புகள் விதிக்கப்பட்டும் விதிக்கப்பட்ட நாளிலிருந்து காலிமனை வரிவிதிப்புகளை நீக்கம் செய்யப்படாமலும் தொடர்ந்து நிலுவையில் இருந்து வருகிறது. மேலும், சில காலிமனைவரிகள் ஒரே இடத்திற்கு வெவ்வேறு பெயர்களில் இரட்டை கேட்புகளாகவும் உள்ளதால், இக்காலிமனைவரி விதிப்புகளை வசூல் செய்ய இயலாத நிலையில் உள்ளதாக இந்நகராட்சி வருவாய் உதவியாளர்களால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இந்நகராட்சி வருவாய் ஆய்வாளர் அவர்களால் மேல் ஆய்வு செய்யப்பட்டு, இந்நகராட்சி காலிமனைவரி நீக்கம் செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| வார்டு எண் | மொத்த காலிமனை வரி விதிப்புகள் | தொகை |
|---|---|---|
| 01 | 07 | 12613 |
| 02 | 26 | 94874 |

| | | |
|---|---|---|
| 03 | 11 | 90036 |
| 04 | 15 | 37305 |
| 05 | 12 | 30777 |
| 06 | 07 | 8983 |
| 07 | 09 | 33192 |
| 08 | 27 | 77391 |
| 09 | 26 | 64610 |
| 10 | 20 | 37820 |
| 11 | 05 | 6694 |
| 12 | 04 | 10917 |
| 13 | 11 | 60282 |
| 14 | 11 | 36020 |
| 15 | 20 | 30202 |
| 17 | 50 | 103989 |
| 18 | 24 | 56363 |
| மொத்தம் | 285 | **792068** |

மேற்கண்ட நிலுவை காலிமனைவரி தொகை ரூ 7,92,068/- ஐ காலிமனை கேட்பு கணினி மென்பொருளில் இருந்து நீக்கம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

இந்நகராட்சியில் வசூலிக்க இயலாத நிலுவை காலிமனை கேட்பு தொகை ரூ 7,92,068/-ஐ காலிமனை கேட்பு கணினி மென்பொருளில் இருந்து நீக்கம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 417/2022/அ2)**

**<u>தீர்மானம் எண்.324</u>**

காயல்பட்டினம் நகராட்சியில் 285 எண்ணம் காலிமனை வரி நிலுவை கேட்பு ரூ.7,92,068/-ஐ பொறுத்தவரை காலிமனை இடங்களுக்கு விதிக்கப்பட்ட வரிவிதிப்புக்குரிய இடங்களில் வீடுகள் கட்டப்பட்டு அதற்கு சொத்துவரி விதிக்கப்பட்டு வரிசெலுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே விதிக்கப்பட்ட காலியிடங்களுக்கும், தொடர்ந்து கேட்புகள் வந்து கொண்டிருக்கிறது. இவற்றை வசூல் செய்ய இயலாத நிலையில் உள்ளதால், நகராட்சி வருவாய் உதவியாளர்கள், வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களால் இந்த காலிமனை வரிகளை தெளிவாக கள ஆய்வு செய்தும், மேலாளரால் மேலாய்வு செய்யப்பட்டும், வசூல் செய்ய முடியாத இனங்கள் தான் என்று தெளிவாக தங்களது குறிப்பின் மூலம் தெரிவித்துள்ளனர். மேலும்,நகர்மன்ற உறுப்பினர்களும் தங்களது பகுதிகளில் உள்ள இரட்டை கேட்புகள் அனைத்தும், வசூல் செய்ய முடியாதவைகள் தான் என உறுதியுடன் ஏக மனதாக தெரிவித்துள்ளனர். எனவே

நகர்மன்ற உறுப்பினர்களின் கருத்துகளின் அடிப்படையில் 285 எண்ணம் கேட்புக்கான காலிமனைவரி ரூ. 7,92,068/-ஐ கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தால் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண்.21**

காயல்பட்டினம் நகராட்சியின் அவசர அவசியத்தின் கீழ் பணிகளை நகராட்சி சட்டம் 1920 பிரிவு15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டு தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு;

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.325**

பிரிவு 15 பதிவேடு பார்வையிட்டு செலவினங்கள் அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்-22**

காயல்பட்டினம் நகராட்சியின் 2022-2023 திருத்திய வரவு செலவு மற்றும் 2023-2024 க்கான உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கை (Budjet) மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.326**

காயல்பட்டினம் நகராட்சியின் 2023- 2024 ஆண்டுக்கான வரவு, செலவு திட்ட அறிக்கைகள் அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்.23**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2022 முதல் பிப்ரவரி - 2023** ஆம் மாதம் வரையிலான கேட்பு வசூல் நிலுவை பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வரியினங்கள் | நிலுவை மற்றும் நடப்பு கேட்பு (இலட்சத்தில்) | நிலுவை மற்றும் நடப்பு வசூல் (இலட்சத்தில்) | நிலுவை மற்றும் நடப்பு நிலுவை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 201.63 | 159.81 | 41.82 |
| 2 | காலிமனை வரி | 31.80 | 15.89 | 15.91 |
| 3 | குடிநீர் கட்டணம் | 110.19 | 72.66 | 37.53 |
| 4 | வரியற்ற இனம் | 13.92 | 13.26 | 0.66 |
| 5 | தொழில்வரி | 22.61 | 22.61 | 0.00 |
| 6 | SUC Charges | 25.88 | 19.25 | 6.64 |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்.327</u>**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**<u>பொருள். எண்.24</u>**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2022 முதல் பிப்ரவரி - 2023** மாதம் வரையிலான வரவு மற்றும் செலவு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வரவினங்கள்** | | | |
|---|---|---|---|
| 110 | வரியினங்கள் | I-1 | 19831000 |
| 130 | நகராட்சியின் வாடகை வரவினங்கள் | I-3 | 1326000 |
| 140 | பயனர் கட்டணங்கள் | I-4 | 9191000 |
| 150 | விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | I-5 | 876000 |
| 160 | வருவாய் மானியங்கள், பங்களிப்பு மற்றும் மானியங்கள் | I-6 | 66984781 |
| 170 | முதலீடுகள் மூலம் வருமானம் | I-7 | 7300 |
| 171 | வங்கி வட்டி | I-8 | 143430 |
| 180 | இதர வருமானம் | I-9 | 913437 |
| **மொத்தம்** | | | **99272948** |
| **செலவினங்கள்** | | | |
| 210 | ஊதிய செலவினங்கள் | I-10 | 41294380 |
| 220 | நிர்வாக செலவினங்கள் | I-11 | 4365762 |
| 230 | இயக்க-பழுதுகள்(ம)பராமரிப்பு செலவுகள் | I-12 | 29445872 |
| 240 | நிதிச்செலவுகள் | I-13 | 1114655 |
| 250 | திட்டசெலவுகள் | I-14 | 418545 |
| 260 | மானியங்கள் (ம) பங்களிப்புகள் | I-15 | 20000 |
| **மொத்தம்** | | | **76659214** |
| **மொத்தம் கூடுதல் / குறைவு** | | | **22613734** |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்.328</u>**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**ஓம்/கே.ஏ.எஸ். முத்து முஹம்மது**
**நகர்மன்ற தலைவர்,**
**காயல்பட்டினம் நகராட்சி**